



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"



FLY TOWARDS
DIGITAL INNOVATION
Services / சேவைகள்
✓DIGITAL MARKETING
✓WEB DEVELOPMENT
✓SOFTWARE DEVELOPMENT
9080999823
7695883647
வடக்கு ரத வீதி, சங்கரன்கோவில்



Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 287 | 10.04.2026 | FRIDAY | PANGUNI: 27 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 287 | 10.04.2026 | வெள்ளிக்கிழமை | பங்குனி : 27 | விலை : ரூ.5/-


## நாம் ஒன்றிணைந்து

# "மகளிர் சக்தியை வலுப்படுத்துவோம்!"

டெல்லி, ஏப்.10-

இந்தியா முழுவதும் பிஹு, விஷு, வைசாகி மற்றும் தமிழ்ப் புத்தாண்டு என விழாக் கோலம் பூண்டுள்ள இவ்வேளையில், மக்கள் அனைவருக்கும் எனது இதயங்கனிந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நன்னாளில் புதுப்பித்தல் உணர்வு நம்மை நிரப்புவது போல, இந்திய ஜனநாயகம் ஒரு புதிய வரலாற்றுப் பாதையில் பயணிக்கத் தயாராகிவிட்டது. குறிப்பாக, ஏப்ரல் 11 அன்று மகாத்மா ஜோதிபா பூலேவின் 200 வது பிறந்தநாள் மற்றும் ஏப்ரல் 14 அன்று பாபா சாகேப் அம்பேத்கர் பிறந்தநாள் வரவுள்ள நிலையில், சமத்துவம் நோக்கிய நமது பயணம் கூடுதல் முக்கியத்துவம் பெறுகிறது.

இதன் ஒரு பகுதியாக, ஏப்ரல் 16 அன்று நாடாளுமன்றம் மீண்டும் கூடவுள்ளது. மகளிர் இட ஒதுக்கீடு சட்ட மசோதாவை விவாதித்து நிறைவேற்றுவதே இந்தக் கூட்டத்தொடரின் முதன்மையான நோக்கமாகும். இதை ஒரு சட்டமியற்றும் கடமையாக மட்டும் பார்க்காமல், தேசத்தின் மக்கள் தொகையில் சரிபாதியாக இருக்கும் பெண்களின் கனவுகளை நனவாக்கும் ஒரு புனிதமான வாய்ப்பாக நாம் கருத வேண்டும். இன்று விண்வெளி முதல் பாதுகாப்புப் படைகள் வரை இந்தியப் பெண்கள் நிகரற்ற சாதனைகளைப் படைத்து வருகின்றனர்.



கல்வி, சுகாதாரம், நிதி உள்ளடக்கத்தில் நாம் மேற்கொண்டு வரும் சீர்திருத்தங்கள் அவர்களின் முன்னேற்றத்துக்கு வலுவான அஸ்திவாரமிட்டுள்ளன. இருப்பினும், நிர்வாகத்திலும் கொள்கை முடிவெடுக்கும் தளங்களிலும் பெண்களின் பங்களிப்பு இன்னும் அவர்களின் தகுதிக்கு ஏற்ற அளவில் அமையவில்லை என்பது நிதர்சனம். அதிகாரத்தில் பெண்கள் பங்கேற்கும்போது, அவர்கள் ஒரு புதிய பார்வையையும், சமூகத்தின் ஆழமான சிக்கல்களைத் தீர்க்கும் தெளிவான அனுபவங்களையும் கொண்டு வருகிறார்கள்.

2029 மக்களவைத் தேர்தலும், அதற்கு முன்பாக வரும் சட்டப்பேரவைத் தேர்தல்களும் மகளிர் இட ஒதுக்கீட்டுடன் நடைபெறச் செய்வது நமது ஜனநாயகக் கடமையாகும். கடந்த பல தசாப்தங்களாகப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டும், ஒருமித்த கருத்து ஏற்படாததால் இந்த இலக்கை நாம் அடைய முடியாமல் போனது. ஆனால், செப்டம்பர் 2023ல் நாடாளுமன்றம் மகளிர் இடஒதுக்கீடு சட்டத்தை நிறைவேற்றியது எனது வாழ்வின் மிகச் சிறந்த தருணமாகும். அதை முழுமையாகச் செயல்படுத்துவதில் ஏற்படும் ஒவ்வொரு நொடி தாமதமும், நமது ஜனநாயக வலுவூட்டலில் ஏற்படும் தாமதமாகும்.

நமது அரசியல் சாசனத்தை உருவாக்கிய பெண் உறுப்பினர்களின் கனவை நிறைவேற்றவும், சமூக நீதியை நிலைநாட்டவும் இதுவே சரியான தருணம். இது ஒரு குறிப்பிட்ட அரசாங்கத்தின் அல்லது அரசியல் கட்சியின் வெற்றி அல்ல; இது ஒட்டுமொத்த தேசத்தின் வெற்றி. எனவே, அனைத்து அரசியல் கட்சிகளும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சி எல்லைகளைக் கடந்து, தேச நலன் கருதி இந்த முன்னெடுப்புக்கு ஆதரவளிக்க வேண்டும் என உருக்கமாக வேண்டுகோள் விடுக்கிறேன்.

ஒற்றுமையே இந்தியாவின் பலம். அந்த ஒற்றுமையின் மூலம், நீண்ட காலமாக விவாதிக்கப்பட்டு வந்த இந்த மாற்றத்தை இப்போது நனவாக்குவோம். இந்தியப் பெண்களின் கைகளில் அதிகாரத்தை ஒப்படைப்பதன் மூலம், வலிமையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய புதிய இந்தியாவைக் கட்டமைப்போம். நமது மகளிர் சக்தியை வலுப்படுத்துவது, எதிர்காலத் தலைமுறைக்கு நாம் செய்யும் மகத்தான தொண்டாகும்.

## "வருவாய்த் துறை, காவல் துறை இணைந்து திமுகவை வெற்றி பெற வைக்க முயற்சி"



திருநெல்வேலி: ஏப்.10-

"தமிழகத்தில் வருவாய்த் துறை, காவல் துறையினர் திமுகவுக்கு ஆதரவாக செயல்பட்டு திமுகவை வெற்றி பெற செய்ய முயற்சி செய்கின்றனர். ஆனால் அது நடக்காது" என்று பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

திருநெல்வேலி தொகுதிக்கு உட்பட்ட பழைய பேட்டை பகுதியில் அதிமுக வேட்பாளர் தச்சை கணேசராஜாவுக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொள்ள வந்த நயினார் நாகேந்திரன் கூறியது: "தமிழகத்தில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் மத்திய அரசால் கொண்டுவரப்பட்டுள்ளன. சாலைகள், மேம்பாலங்கள் உள்ளிட்ட ஏராளமான திட்டங்கள் மத்திய அரசின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனால், மாநில அரசு மக்கள் பயன்பாட்டுக்கான முன்னேற்றத் திட்டங்கள் எதையும் கொண்டுவரவில்லை. இது குறித்து பொதுமக்கள் முன்னிலையில் விவாதிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

கடந்த 5 ஆண்டுகளில் தமிழகத்தில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. மாநிலத்தில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக கூறப்படுவது பொய். தமிழக முதல்வர் சொல்லும் மாநில வளர்ச்சி எதில் என்றால் கஞ்சா விற்பனையில் மட்டுமே.

காங்கிரஸ் கட்சி எங்கிருக்கிறது என்றே தெரியவில்லை. திமுக கூட்டணியில் மட்டும்தான் அக்கட்சி இருக்கிறது. ஆலங்குளம் பகுதியில் துப்பாக்கிச் சூடு சம்பவம் மட்டுமின்றி, தமிழகம் முழுவதும் காவல் நிலைய மரணங்களும் நடைபெற்று வருகின்றன. சட்டம் மற்றும் ஒழுங்கை கட்டுப்படுத்த காவல் துறையால் முடியவில்லை.

முதல்வரைப் பற்றி தவறாக பேசினால் உடனடியாக கைது செய்கிறார்கள். ஆனால், பிரதமரை கொலை செய்ய வேண்டும் என கூறியவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் திமுகவுக்கு ஆதரவாக செயல்படுகிறார். காவல் துறை உயர் அதிகாரிகளும் அதேபோல் செயல்படுகின்றனர்.

வருவாய் துறையும் காவல் துறையும் இணைந்து திமுகவை மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவர முயற்சி செய்கின்றனர். ஆனால் அது நிச்சயமாக நடைபெறாது. அதிமுக திட்டங்களை பார்த்து காப்பி அடித்தே திமுக செயல்பட்டு வருகிறது" என்று அவர் தெரிவித்தார்.

திருநெல்வேலியில் தவெக தலைவர் விஜய் பிரச்சாரத்தின்போது ஏராளமானோர் கூடியிருந்தது தொடர்பான கேள்விக்கு, "அதை நான் பார்க்கவில்லை" என்று பதில் அளித்தார்.

## "பிடிஆர் மீதான மக்களின் அதிருப்தி தான் எனக்கு பெரிய பலம்" : சுந்தர்.சி விவரிப்பு

மதுரை; ஏப்.10-

''என்னுடைய மிகப் பெரிய பலமே மதுரை மத்திய தொகுதி திமுக வேட்பாளர் பழனிவேல் தியாகராஜன்தான். நாங்கள் பேச வேண்டியதை எல்லாம் அவர் பேசி வருகிறார். அவருக்கு மிகப் பெரிய நன்றி'' என்று என்டிஏ கூட்டணி வேட்பாளர் சுந்தர்.சி தெரிவித்தார்.

இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறுகையில், "திமுகவினர் தங்களுக்கான திட்டங்களை மட்டும் எப்படியாவது நிறைவேற்றிக் கொள்கிறார்கள். ஆனால், மக்களுக்கான திட்டங்களில் கவனம் செலுத்துவதில்லை.

மதுரை மெட்ரோ ரயில் செயல்வடிவ திட்டத்தில் மாநில அரசு நிறைவேற்றி கொடுக்க வேண்டிய நிறைய விஷயங்கள் இருந்தன. அதை எதையும் அவர்கள் செய்யாமல், ஐந்து ஆண்டுகள் ஆட்சியை முடித்துவிட்டு பழியை தூக்கி அப்படியே மத்திய அரசு மீது போட்டுவிட்டு தப்பிக்கப் பார்க்கிறார்கள்.

இதுபோல், மதுரை விமான நிலையம், எய்ம்ஸ் போன்ற மதுரைக்கு வர வேண்டிய எத்தனையோ மத்திய அரசு திட்டங்களுக்கு மாநில அரசு முட்டுக்கட்டையை போட்டு தடுத்து அரசியல் செய்கிறார்கள். ஆனால், அதிமுக ஆட்சியில் இதே மெட்ரோ ரயில் திட்டத்தை மத்திய அரசை மீறி சென்னைக்கு மட்டும் எப்படி கொண்டு வர முடிந்தது.

ஆனால், மதுரையில் திமுக ஆட்சியில் மெட்ரோ திட்டத்துக்கான ஆரம்ப கட்ட பணிகளுக்கான ஆவணங்களை கூட சமர்ப்பிக்கவில்லை. அப்படி இருக்கும்போது மத்திய அரசு மீது பழி போடுவது இவர்களுடைய தகுதியின்மையைதான் காட்டுகிறது.

என்னுடைய மிகப்பெரிய பலம் என்ன என்று இன்று செய்தியாளர்கள் சிலர் கேட்டார்கள். அதற்கு நான் என்னுடைய எதிர்க்கட்சி வேட்பாளர் பழனிவேல் தியாகராஜன்தான் என்று சொன்னேன். மக்களுக்கு அவர் மீது இருக்கிற அதிருப்திதான் எனக்கு பெரிய பலமாக இருப்பதாகச் சொன்னேன். இப்போது நான் பேச வேண்டியதையெல்லாம் என் சார்பாக அவரே ஏதோ ஒரு அதிருப்தியில் பேசிவிடுகிறார். அதற்கு அவருக்கு மிகப் பெரிய நன்றி. திமுக அரசு என்னனென்ன நல்லது செய்யவில்லையோ, அதை அவரே சரியாக சொல்லிவிடுகிறார்.

சில நாட்களுக்கு முன் இந்த ஆட்சியில் நானே நல்ல பணிகளை செய்ய முடியவில்லை, அதை வெளியே சொல்ல முடியவில்லை என்று ஆதங்கப்பட்டுள்ளார். சட்டப் பேரவையிலும் என்னால் எதுவும் செய்ய முடியவில்லை, அதிகாரிகள் கையில்தான் இருக்கிறது என்று தனது பொறுப்பை தட்டிக் கழித்துள்ளார். அதனால், முதல்வரால் தண்டிக்கப்பட்டுள்ளார்.

நாங்கள் பேச வேண்டிய விஷயங்களை அவரே பேசிக் கொண்டு இருக்கிறார். மக்களுக்கு தெரிய வேண்டிய உண்மைகளை எங்கள் சார்பாக அவரே கூறி வருகிறார். அவருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றி'' என்று சுந்தர்.சி கூறினார்.

## புதுச்சேரி தேர்தல்: ஆளுநர், தலைவர்கள் வாக்களித்த பின் கூறியது என்ன?

புதுச்சேரி: ஏப்.10-

புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலையொட்டி துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன், முன்னாள் முதல்வர் நாராயணசாமி உள்ளிட்ட தலைவர்கள் வாக்களித்தனர்.

புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தல் வாக்குப்பதிவு இன்று நடைபெற்று வருகிறது. இதையொட்டி ராஜ்பவன் தொகுதிக்குட்பட்ட சுகாதாரத் துறை இயக்குநகரத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடியில் துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் தனது குடும்பத்தினருடன் சென்று வாக்கு செலுத்தினார்.

அப்போது அவர் கூறும்போது, ''புதுச்சேரியில் உள்ள அனைத்து குடிமக்களும் தங்களது வாக்குரிமையை செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்'' என்றார்.

மணவெளி சட்டப்பேரவை தொகுதியில் போட்டியிடும் பாஜக வேட்பாளரான சட்டப்பேரவை தலைவர் செல்வம் தவளக்குப்பத்தில் உள்ள ஆச்சாரியா பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடியில் வாக்களித்தார்.

முன்னாள் முதல்வர் நாராயணசாமி மிஷன் வீதியில் உள்ள வ.உ.சி பள்ளி வாக்குச்சாவடியில் தனது வாக்கினை செலுத்தினார். அப்போது நாராயணசாமி கூறுகையில், ''புதுச்சேரியில் திமுக, காங்கிரஸ் கூட்டணிக்கு மக்கள் மத்தியில் எழுச்சி உள்ளது. ஸ்டாலின், ராகுல் புதுச்சேரிக்கு வந்து பிரச்சாரம் செய்து வாக்குறுதி அளித்ததின் எதிரொலியாக மக்கள் மனதில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் புதுச்சேரியில் காங்கிரஸ், திமுக கூட்டணி ஆட்சி அமைக்கும்'' என கூறினார்.




மண்ணாடிப்பட்டு தொகுதி வேட்பாளரான உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், தனது மனைவியுடன் வந்து திருக்கனூரில் அமைக்கப்பட்ட வாக்குச்சாவடியில் வாக்களித்தார். பின்னர் அவர், ''எங்களுக்குரிய வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருக்கிறது.

புதுச்சேரியில் மீண்டும் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும். ஏற்கெனவே முதல்வர் புதுச்சேரி மாநில அந்தஸ்து தொடர்பாக பிரதமரிடம் கோரிக்கை வைத்திருக்கின்றார். யூனியன் பிரதேசமாக இருக்கின்ற காரணத்தால் அதனுடைய சாதக பாதகங்களை ஆராய்ந்து உரிய நேரத்தில் உரிய முடிவை பிரதமர் எடுப்பார்.

பிரதமர், மத்திய உள்துறை அமைச்சர் புதுச்சேரிக்கு வருகை தந்து தங்களின் கவனத்தை இங்கே செலுத்தியிருப்பதன் நோக்கத்தை மக்கள் புரிந்து கொண்டுள்ளார்கள். அதனால் தான் மக்கள் ஆர்வமாகவும், மகிழ்ச்சியுடன் வாக்களித்துவிட்டு செல்கின்றனர்.

நான் முதல்வராவது குறித்து பிரதமர், உள்துறை அமைச்சர், கட்சி தலைவர், தேசிய ஜனநாயக கூட்டணி தலைவர் முதல்வர் ரங்கசாமி சேர்ந்து உரிய நேரத்தில் உரிய முடிவை எடுப்பார்கள்'' என தெரிவித்தார்.

புதுச்சேரி சட்டப்பேரவை எதிர்கட்சி தலைவரும், வில்லியனூர் தொகுதி திமுக வேட்பாளருமான சிவா உருளையன்பேட்டை தொகுதி இளங்கோ நகரில் உள்ள கூட்டுறவு சங்க கட்டிடத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடியில், குடும்பத்துடன் வந்து வாக்களித்தார். தொடர்ந்து அவர் கூறும்போது, "ஜனநாயக கடமையை நிறைவேற்றும் வகையில் மக்கள் 100 சதவீத வாக்களிக்க வேண்டும்.

புதுச்சேரியில் ஒரு மாற்றத்தை நோக்கி நல்ல ஆட்சி அமைய வேண்டும் என்று மக்கள் திரண்டு வாக்களித்து வருகின்றனர். நிச்சயமாக மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி ஆட்சியமைக்கும். தமிழக முதல்வர் ஸ்டாலின் பிரச்சாரம் மிகப்பெரிய மாற்றத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி உள்ளது.

புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வேண்டும் என்று திமுக எம்பிக்கள் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பி வருகின்றனர். திமுக தலைவரும் அதை வலியுறுத்து வருகிறார்'' என்றார்.

பாஜக வேட்பாளர் ராமலிங்கம் கூறுகையில், ''தன்னுடைய ஜனநாயக கடமையை அனைவரும் சிறப்பாக செய்ய வேண்டும். தேர்தல் துறை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். முன்பெல்லாம் வாக்கு சதவீதம் குறைவாக இருக்கும். இம்முறை எஸ்ஐஆர்க்கு பிறகு 90 சதவீதத்தை தாண்டும் என்று நான் நினைக்கின்றேன். புதிய வாக்காளர்கள் விழிப்போடு இருக்கிறார்கள்.

பலர் வெளியூர்களில் இருந்து வந்துள்ளனர். வாக்களிப்பது குறித்து நல்ல விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது. ஜனநாயக கடமையை நிறைவேற்ற வேண்டும் என்ற உணர்வு வந்துள்ளது'' என கூறினார்.

லட்சிய ஜனநாயக கட்சியின் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் தனது மனைவியுடன் ரெட்டியார்பாளையம் புகுதியில் உள்ள இமாகுலேட் பள்ளி வாக்குச்சாவடியில் வாக்களித்தார். இதேபோல் அமைச்சர்கள் உள்ளிட்ட தலைவர்கள் வாக்குகளை செலுத்தினர்.


விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000



■ மதுரை கிழக்கு தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் பி.மூர்த்தி அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வெள்ளாளர் முன்னேற்ற கழகம் சார்பாக மாநில அமைப்பு செயலாளர், மாநில மகளிரணி தலைவி அன்னலெட்சுமிசகிலா கணேசன், வாழ்த்துகளை தெரிவித்தார்.அருகில் நிர்வாகிகள் உள்ளனர்

# “திமுகவை வீட்டுக்கு அனுப்பவே இந்தத் தேர்தல் களம்! சோழவந்தானில் ‘சின்னம்மா’ சசிகலா ஆவேச முழக்கம்!

சோழவந்தான் ஏப். 10-

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பேருந்து நிலையத்தில், சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்ற கழக வேட்பாளர் சமயநல்லூர் டாக்டர் பாலமுருகனை ஆதரித்து, அக்கட்சியின் நிறுவனத் தலைவர் சின்னம்மா சசிகலா தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.



*ஆட்சி மாற்றம்:* "மக்களின் வாழ்வில் ஒளி ஏற்றிடவும், மக்கள் விரோத திமுக ஆட்சியை வீட்டுக்கு அனுப்பவும் இந்தத் தேர்தலில் களம் கண்டுள்ளோம். இது மக்களுக்கான இயக்கம்" எனத் தெரிவித்தார். *கடன் சுமை:* "புரட்சித் தலைவரும், அம்மாவும் ஏழை மக்களுக்காக ஏராளமான திட்டங்களைச் செய்தார்கள். ஆனால், இன்று திமுக எதையும் செய்யாமல் 12 லட்சம் கோடி ரூபாய் கடன் வாங்கியுள்ளது. இது ஒவ்வொரு வாக்காளரின் தலையிலும் விழும் சுமையாகும்" எனச் சாடினார்.

நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள்: "விவசாயிகளுக்கான மின் மோட்டார் மானியம், நெல்லுக்குக் கூடுதல் விலை, நீர்நிலைச் சீரமைப்பு என எதையும் திமுக செய்யவில்லை. மாறாகச் சொத்து வரி மற்றும் வீட்டு வரியை உயர்த்தி மக்களை வதைக்கிறார்கள்" எனக் குற்றம் சாட்டினார்.அருகில் நிர்வாகிகள் பண்ணைகுடி மைனர் ராமச்சந்திரன், சமயநல்லூர் சேர்வை, மற்றும் கூட்டணி கட்சியினரும் கலந்து கொண்டனர்..

# அடுத்தது யார் ஆட்சி... சீர்காழியே சாட்சி! ‘செண்டிமெண்ட்’டால் களமிறங்கிய துர்கா ஸ்டாலின்

நாகப்பட்டினம்/ மயிலாடுதுறை, ஏப்.10-

இதுவரை அரசியல் களத்தில் எந்த வேட்பாளருக்கும் நேரில் சென்று வாக்கு சேகரிக்காத முதல்வர் ஸ்டாலின் மனைவி துர்கா ஸ்டாலின், சீர்காழி தொகுதியில் மக்கள் சந்திப்பு நடத்தி அங்கு உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் மதிமுக வேட்பாளர் செந்தில் செல்வனுக்கு ஆதரவு திரட்டினார்.



இது திமுக உள்ளிட்ட கட்சிகளின் மத்தியில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. துர்கா ஸ்டாலின் இப்படி நேரடியாக களம் இறங்கியுள்ளதற்கு பின்னணியில் சீர்காழி தொகுதி குறித்த ஒரு நம்பிக்கை இருக்கிறது என்கிறார்கள்.

இந்தத் தொகுதியில் எந்தக் கட்சி வெற்றி பெறுகிறதோ, அந்தக் கட்சிதான் தமிழகத்தில் ஆட்சி அமைக்கும் என்ற நீண்ட நெடிய செண்டிமெண்ட் உண்டு. இதனால், இந்தத் தொகுதியை ஒரு தீர்க்கதரிசி தொகுதி என்றும் கூறுவது உண்டு. இதனிடையே, இந்த முறை இந்தத் தொகுதியில் மதிமுக தனி சின்னத்தில் போட்டியிடும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இதனால், புதிய சின்னத்தை அனைத்து தரப்பினரிடமும் கொண்டு சேர்ப்பதில் சிக்கல் ஏற்படும் என்பதால், மதிமுக வேட்பாளர் செந்தில் செல்வனை உதயசூரியன் சின்னத்திலேயே நிற்க வைத்தார்கள்.

எனவே, இந்தத் தொகுதியில் உதயசூரியனை எப்படியாவது வெற்றி பெற வைக்க வேண்டும் என்று முடிவு எடுத்து ஸ்டாலினும், துர்கா ஸ்டாலினும் தீவிரமாக செயல்படுவதாக சொல்கிறார்கள். வேட்பாளர்களை ஆதரித்து நாகையில் பிரச்சாரக் கூட்டம் நடைபெற இருந்த நிலையில், அதை மாற்றி சீர்காழியில் பிரச்சார பொதுக் கூட்டத்தை நடத்தினார் ஸ்டாலின்.

இதற்காக சீர்காழிக்கு வந்திருந்தவர் அன்று காலையிலேயே திடீரென ஒரு மணி நேரத்துக்கும் மேலாக நடைபயணம் சென்று தொகுதி மக்களை சந்தித்து திமுகவுக்கு வாக்கு சேகரித்தார். தொடர்ந்து அன்று மாலை அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், ‘இந்த ஊர் மருமகனாக வாக்கு கேட்டு வந்திருக்கிறேன்’ என பிரச்சாரம் செய்தார்.

முன்னதாக, தனது சொந்த ஊரான திருவெண்காடு சீர்காழி தொகுதியில் வருவதால், துர்கா ஸ்டாலினும் தனது பங்குக்கு நேரடியாக மக்களை சந்தித்து, அவர்களுடன் உரையாடி, துண்டுப்பிரசுரங்கள் வழங்கி வாக்கு சேகரித்தார். சீர்காழியில் வெற்றி பெற்றால் தான் திமுக ஆட்சி அமையும் என்ற செண்டிமெண்டை அவர் நம்புவதுதான் இந்தளவுக்கு தீவிரமாக அவர் களமிறங்கியதற்கு காரணம் என்கிறார்கள். சீர்காழி செண்டிமெண்ட் இந்தமுறையும் பலிக்குமா? என்று கொஞ்சம் காத்திருந்து பார்க்கலாம்

# திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளையில் அனைத்து வணிகர் சங்க பேரமைப்பின் ஆலோசனை கூட்டம்




திருநெல்வேலி, ஏப்.10-

திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளையில் அனைத்து வணிகர் சங்க பேரமைப்பின் ஆலோசனை கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. தங்கையா ஜி.கணேசன் முன்னிலை வகித்து, கடந்த ஆண்டில் பேரமைப்பு நடத்திய நலத்திட்டங்களையும், சாதனைகளையும் பேசினார்கள். துணைத்தலைவர் ஷிஸி வெங்கேஷ். வரவேற்புரை நிகழ்த்தினார். சிறப்பு விருந்தினர் திசையன்விளைகாவல் ஆய்வாளர் எழில் சுரேஷ் சிங் சிறப்புரையாற்றினார்கள்.

தலைவர் ஜி. சாந்தகுமார் பேரமைப்பின் செயல்பாடுகள் மற்றும் வளர்ச்சிக்கான திட்டங்கள் பற்றி அருமையாக உரையாற்றினார். காமராஜர் மன்ற நிர்வாகி ராஜன், ஆர் எம் பி மிக்கேல் ஆசிரியர் சுயம்பு ராஜன் ஜி பி எம் குமார் உள்பட பலர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர். அமைப்பாளர் ரெத்னா காமராஜ் நன்றியுரை தெரிவித்தார்.



■ காவல் அதிகாரிகள், தங்களுக்கு மேல் உள்ள உயர் அதிகாரிகள் உத்தரவுகளை மட்டுமே பின்பற்ற வேண்டும். வீடியோ, கான்பரென்ஸ், மூலம் நடைபெற்ற காவல் உயர் அதிகாரிகள் கூட்டத்தில் டிஜிபி உத்தரவிட்டுள்ளார். தேர்தல் நேரத்தில் எந்தவித அரசியல் தலையீடும் இன்றி, சார்பில்லாமல் பணியாற்ற வேண்டும் என தமிழக டி.ஜி.பி. சந்தீப்ராய்ரத்தோர் உத்தரவிட்டுள்ளார்.

# சிக்கிம் நிலச்சரிவில் சிக்கிய 1,321 சுற்றுலாப் பயணிகளை மீட்டது ராணுவம்

லாச்சென், ஏழுகூஷப்.10-

வடக்கு சிக்கிமின் மங்கன் மாவட்டத்தில் உள்ள லாச்சென் பகுதியில் கடும் நிலச்சரிவுகள் காரணமாக சாலைப் போக்குவரத்து தொடர்பு துண்டிக்கப்பட்டதால், அங்கு சிக்கித் தவித்த 1,321 சுற்றுலாப் பயணிகள் மீட்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.




லாச்சென் பகுதியில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டு சிக்கித்தவித்த 1,321 சுற்றுலாப் பயணிகளும், 84 உள்ளூர் மக்களும் மீட்கப்பட்டதாக அதிகாரிகள் கூறினர். மங்கன் மாவட்ட ஆட்சியர் அனந்த் ஜெயினின் மேற்பார்வையிலும், ராணுவம், எல்லைச் சாலைகள் அமைப்பு, 'லாச்சென் ஜூம்சா' மற்றும் சுற்றுலாத் துறை சார்ந்தவர்களின் தீவிர ஒருங்கிணைப்புடனும் இந்த மீட்புப் பணி மேற்கொள்ளப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

சுற்றுலாப் பயணிகளை தரம் சூ பகுதியிலிருந்து சுங்தாங் வரையிலும், அங்கிருந்து தொடர்ந்து காங்டாக்கும் அழைத்துச் செல்ல, பேருந்துகள் மற்றும் சுற்றுலா வாகனங்களுக்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

தரம் சூ பகுதியில் மீட்புப் பணிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, அந்த தொகுதி சட்டப்பேரவை உறுப்பினரும், சிக்கிம் சமூக நலத்துறை அமைச்சருமான சம்டுப் லெப்சா, ராணுவம் மற்றும் எல்லைச் சாலைகள் அமைப்பின் அதிகாரிகளுடன் கலந்துரையாடி, அவர்களின் தொடர் முயற்சிகளுக்கு நன்றி தெரிவித்தார். மேலும், அவர் சுற்றுலாப் பயணிகளுடனும் கலந்துரையாடி, அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்."மோசமான வானிலை மற்றும் மீட்பு வாகனங்களை கொண்டு செல்வதில் சவால்கள் இருந்தபோதிலும், குழுப் பணி மற்றும் சமூக உணர்வின் மூலம் இப்பணி வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது," என்று சம்டுப் லெப்சா குறிப்பிட்டார்.

# “ஆடு, மாடு மேய்த்தல் அரசு வேலையாக்கப்படும்! சங்கரன்கோவில் நாம் தமிழர் வேட்பாளர் கவிதா அதிரடி வாக்குறுதி!

சேர்ந்தமரம் ஏப் 10-

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மு.கவிதா, சேர்ந்தமரம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் 'விவசாயி' சின்னத்திற்கு ஆதரவாகத் தீவிரமாக வாக்கு சேகரித்தார்.*கிராமம் கிராமமாகப் பிரச்சாரம்:* ரெங்கநாதபுரம், துரைச்சாமிபுரம், குலசேகரமங்கலம், திருமலாபுரம், கடம்பன்குளம், வேலப்பநாடாரூர், கடையாலுருட்டி, பாண்டியபுரம் எனப் பல்வேறு கிராமங்களில் வீடு வீடாகச் சென்று



வேட்பாளர் கவிதா வாக்கு கேட்டார். விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போரின் வாழ்வாதாரத்தை உயர்த்த, ஆடு மற்றும் மாடு மேய்க்கும் தொழிலை அரசு வேலையாக மாற்ற உறுதி அளிக்கிறேன்" என அவர் பேசினார். மது அருந்தியவர்களை தேர்தல் ஆணையம் எக்காரணம் கொண்டும் வாக்குச்சாவடிக்குள் அனுமதிக்கக் கூடாது" என்ற அதிரடி கோரிக்கையை அவர் முன்வைத்துள்ளார்.

*நிர்வாகிகள் பங்கேற்பு:* இரவு சேர்ந்தமரம் கிளையில் நடைபெற்ற அறிமுகக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் விஜயராஜ், தலைவர் இராமச்சந்திரவேல், மாநில ஒருங்கிணைப்பாளர் சாந்தகுமார், கொள்கை பரப்புச் செயலாளர்கள் ஆசான் சரவணன், அ.கோ.தங்கவேல், செ. பசும்பொன் மற்றும் விவசாயி பாலா உள்ளிட்ட முக்கியப் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டு எழுச்சியுரையாற்றினர்.

# “எனக்கு நிதிஷ் குமார் நிலை ஏற்படாது” புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி உறுதி

புதுச்சேரி, ஏப்.10-

“எனக்கு நிதிஷ் குமார் நிலை ஏற்படாது” என்று புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி உறுதிபட தெரிவித்துள்ளார்.



புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு இன்று காலை தொடங்கி நடைபெற்றது. தனது தொகுதியில் வாக்களித்த பிறகு முதல்வர் ரங்கசாமி தொகுதி வாரியாக சென்று பார்வையிட்டு அங்குள்ள நிலவரம் குறித்து கேட்டறிந்தார்.

தொடர்ந்து மங்கலம் தொகுதியில் டீக்கடைக்கு சென்ற முதல்வர் ரங்கசாமி டீ மற்றும் அதிரசம் சாப்பிட்டுக் கொண்டே பொதுமக்களிடம் பேசினார். அதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் கலந்துரையாடினார்.

வாக்குப் பதிவு அதிகரித்துள்ளது யாருக்கு சாதகமாக இருக்கும் என நினைக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, ”மக்கள் விழிப்புணர்வுடன் அதிகளவில் வாக்களிக்கின்றனர். மக்கள் நலத் திட்டங்கள் அவர்களுக்கு சென்றடைந்துள்ளதும் ஒரு காரணம். நாங்கள் ஆட்சிக்கு திரும்ப வர வேண்டும் என்றுதான் வாக்களிக்கிறார்கள். கிராமத்தில் விழிப்புணர்வு அதிகம் இருக்கும். கிராமங்களில் வாக்களிப்பு அதிகமாக உள்ளதும் இதற்கு ஒரு காரணம்” என்று முதல்வர் ரங்கசாமி கூறினார்.

நீங்கள் பிரச்சாரத்துக்கு வந்தபோது கிராமத்தில் தானே உங்களிடம் அதிகம் கேள்வி கேட்டார்கள் என்று கேட்டதற்கு, ”ஆமாம். நான் செய்வதால் என்னிடம் கேட்டார்கள். கடந்த மக்களவைத் தேர்தலின்போது ரேஷன் கடைகளை திறந்து அரிசி, கோதுமை கேட்டார்கள், நானும் ரேஷன் திறந்து இலவச அரிசி, கோதுமை தந்தேன். தற்போதும் தங்கள் தேவைகளை என்னிடம் கேட்டார்கள். நான் செய்வேன் என்பதும் அவர்களுக்கு தெரியும்” என்று முதல்வர் கூறினார்.

இம்முறை எத்தனை இடங்கள் வெல்வீர்கள் என்ற கேள்விக்கு, “ஆட்சியமைக்கும் அளவுக்கு தேர்தலில் வெல்வோம்” என்று முதல்வர் ரங்கசாமி கூறினார்.

நிதிஷ் குமாரின் நிலைதான் உங்களுக்கு ஏற்படும் என்கிறார்களே என்று எதிர்க்கட்சியினர் கூறுவது குறித்த கேள்விக்கு, ”அதுபோன்ற நிலை ஏற்படாது. என் தலைமையில் ஆட்சி அமையும் என்று சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் சொல்வதைச் செய்வார்கள். மத்திய அரசு உடன் இணக்கமாக இருந்து பல திட்டங்கள் செயல்படுத்தி உள்ளோம்” என்று முதல்வர் கூறினார்.

கூட்டணிக் கட்சி தொகுதிகளுக்கு ஏன் பிரச்சாரம் செல்லவில்லை என்ற கேள்விக்கு, “கூட்டணிக் கட்சியில் பெரியத் தலைவர்கள் பிரச்சாரத்துக்கு வந்தார்கள். நான்தான் என் கட்சிக்கு பிரச்சாரத்து செல்ல வேண்டும். நாட்களும் குறைவாக இருந்தது. ஆட்சிக்கு வர வேண்டும் என்பதை இலக்காக வைத்துதான் நாங்கள் அனைவரும் பிரச்சாரம் செய்தோம்” என்று ரங்கசாமி கூறினார்.

# வடசென்னையில் ஆவின் பால் விநியோகம் பாதிப்பு: தனியார் நிறுவன பாலை அதிக விலை கொடுத்து வாங்கும் பொதுமக்கள்

சென்னை, ஏப்.10-

மாதவரம் பால் பண்ணையில் தொழிலாளர்கள் பற்றக்குறையால், வடசென்னையில் ஆவின் பால் விநியோகம் பாதிக்கப்பட்டது.




மாதவரம் பால் பண்ணையில் இருந்து வடசென்னை பகுதி முழுவதும் ஆவின் பால் விநியோகம் செய்யப்படுகிறது.

வடசென்னை பகுதியில் கடந்த சில நாட்களாக, ஆவின் பால் விநியோகம் குறைவாக இருந்ததால், பொதுமக்களுக்கு தேவையான அளவு பால் கிடைக்கவில்லை. கடைகளில் உடனே விற்று தீர்ந்து விடுவதால், பொதுமக்கள் தனியார் பாலை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இந் நிலையில், வடசென்னை பகுதியில் ஆவின் பால் விநியோகம் நேற்று கடுமையாக பாதிப்படைந்தது. பெரம்பூர், திருவிக நகர், வியாசர்பாடி, கொளத்தூர், கொடுங்கையூர், கொருக்குப்பேட்டை உள்ளிட்ட வடசென்னையின் பல பகுதிகளில் ஆவின் பால் விநியோகம் பாதிக்கப்பட்டது. இதனால், ஆவின் பால் கிடைக்காமல் பொதுமக்கள் சிரமப்பட்டனர்.

குறைந்த அளவிலேயே பால் விநியோகம் செய்யப்பட்டதால், கடைகளுக்கு குறைந்த எண்ணிக்கையிலான பால் பாக்கெட்கள் வழங்கப்பட்டதாக பால் விநியோகஸ்தர்கள் தெரிவித்தனர்.

மாதவரம் பால் பண்ணையில் கடந்த சில நாட்களாக நீடிக்கும் ஆவின் பால் தட்டுப்பாட்டுக்கு, சரியான நடவடிக்கை எடுக்காமல் போனதே இந்த பாதிப்புக்கு காரணம் என, தமிழக பால் முகவர்கள் நலச்சங்க தலைவர் பொன்னுசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து, அவர் மேலும் கூறியதாவது: மாதவரம் பால் பண்ணையில் தொழிலாளர்களுக்கான ஒப்பந்தம் கடந்த மார்ச் 31ம் தேதியுடன் நிறைவடைந்தது.

இதையடுத்து, சோழிங்கநல்லூர் பால் பண்ணையில் தொழிலாளர்களுக்கான ஒப்பந்தம் எடுத்துள்ள ஒப்பந்ததாரருக்கே மாதவரம் பால் பண்ணைக்கான ஒப்பந்தம் சேர்த்து வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறு ஒப்பந்தம் பெற்ற ஒப்பந்ததாரரால் மாதவரம் பால் பண்ணையில் பணிக்கு தேவையான சுமார் 50க்கும் மேற்பட்ட தொழிலாளர்களை அனுப்ப இயலவில்லை.

வெறும் 8 பேரை மட்டுமே அனுப்ப முடிந்தது. கடந்த ஒரு வார காலத்துக்கும் மேலாக, ஒப்பந்த தொழிலாளர்கள் பணிக்கு வராததால் வெறும் 8 தொழிலாளர்களை கொண்டு மாதவரம் பால் பண்ணை இயங்கி வந்தது.

இதனால், பால் முகவர்களுக்கும், பொதுமக்களுக்கும் ஆவின் பாலை தங்குதடையின்றி விநியோகம் செய்ய வேண்டும் என்ற நோக்கில் மொத்த விநியோகஸ்தர்களின் வாகன ஓட்டுநர்களும், வாகன உதவியாளர்களும் பால் பாக்கெட்டுகளை பால் டப்புகளில் அடுக்கி வாகனங்களில் ஏற்றும் பணிகளை தொடர்ந்து செய்தனர்.

ஆனால், தொழிலாளர்கள் பற்றாகுறையை சரிசெய்ய ஆவின் நிர்வாகம் தரப்பிலிருந்தும், ஒப்பந்ததாரர் தரப்பிலிருந்தும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. அதே நேரத்தில், வாகன ஓட்டுநர்கள், வாகன உதவியாளர்கள் இப்பணியில் தொடர்ந்து ஈடுபட முடியவில்லை.

இதையடுத்து, மாதவரம் பால் பண்ணையில் இருந்து விநியோகம் செய்யப்பட வேண்டிய ஆவின் பால் விநியோகம் சுமார் 60 சதவீதத்துக்கும் மேல் முடங்கியது.

இதனால், ஆவின் பால் கிடைக்காமல் வடசென்னை பகுதி பொதுமக்களும் கடும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர். மாதவரம் பால் பண்ணையில் நிலவும் ஒப்பந்த தொழிலாளர்கள் பிரச்னைக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# ஹார்முஸ் ஜலசந்தி வழியாக செல்லும் கப்பல்களுக்கு மாற்றுப் பாதைகளை அறிவித்தது ஈரான்

தெஹ்ரான், ஏப்.10-

ஹார்முஸ் ஜலசந்தியின் பிரதானப் கப்பல் வழித்தடத்தில் கடல் கண்ணிவெடிகள் இருக்கும் ஆபத்தைக் காரணம் காட்டி, ஹார்முஸ் வழியாகப் பயணிக்கும் கப்பல்களுக்கு மாற்றுப் பாதைகளை ஈரான் ராணுவம் அறிவித்தது.

கடல் கண்ணிவெடிகளின் அபாயம் காரணமாக கப்பல்கள் பிரதான வழித்தடத்தைத் தவிர்க்க வேண்டும் என்றும், கப்பல்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக புதிய பாதைகளைப் பயன்படுத்த வேண்டும் என்றும் ஈரான் அறிவித்துள்ளது.

உலகின் எண்ணெய் வர்த்தகத்தில் ஐந்தில் ஒரு பங்கினை வகிக்கும் மிக முக்கிய நீர்வழிப் பாதையாக விளங்கும் ஹார்முஸ் ஜலசந்தி, ஈரான் மீதான போர் காரணமாக மார்ச் தொடக்கத்திலிருந்து மூடப்பட்டது.



நேற்று முடிவான இரண்டு வார கால போர் நிறுத்தத்தின் ஒரு பகுதியாக, தற்காலிகமாக ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கப்பல்கள் செல்ல ஈரான் ஒப்புக்கொண்டுள்ளது. இருப்பினும், கண்ணிவெடிகள் பொருத்தப்பட்டதால், பிரதான வழித்தடம் இயல்பான போக்குவரத்துக்கு அபாயகரமானதாக உள்ளது.

இது குறித்து ஈரான் ராணுவம் வெளியிட்ட அறிக்கையில், 'கடல்சார் பாதுகாப்புக் கொள்கைகளுக்கு இணங்கவும், கடல் கண்ணிவெடிகள் மீது மோதாமல் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், ஹார்முஸ் ஜலசந்தியைக் கடக்க விரும்பும் அனைத்துக் கப்பல்களும், போக்குவரத்துக்கான மாற்று வழிகளைப் பயன்படுத்த வேண்டும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஹார்முஸ் ஜலசந்தியில் கப்பல்கள் செல்வதற்கான புதிய வரைபடமும் ஈரான் கடற்படையால் வெளியிடப்பட்டது. இதன்படி, உள்வரும் கப்பல்கள் ஓமன் வளைகுடாவிலிருந்து வடக்கு திசையில் லராக் தீவை நோக்கிச் சென்று, பின்னர் பாரசீக வளைகுடாவை நோக்கித் தொடர்ந்து செல்லவேண்டும். வெளியேறும் கப்பல்கள் பாரசீக வளைகுடாவிலிருந்து, லராக் தீவின் தெற்கே கடந்து, பின்னர் ஓமன் வளைகுடாவை நோக்கித் தொடர்ந்து செல்லவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# "பழனிசாமிக்கு தேர்தல் ஜுரம் வந்துவிட்டது" கனிமொழி எம்.பி விமர்சனம்

நாமக்கல், ஏப்.10-

"எடப்பாடி பழனிசாமிக்கு தேர்தல் பயம் போய் தற்போது தேர்தல் ஜுரம் வந்துவிட்டது. அதனால் என்ன பேசுறோம் என தெரியாமல் முதல்வரை கீழ்த்தரமாக விமர்சனம் செய்கிறார்" என கனிமொழி எம்.பி தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் புதுச்சத்திரம், நாமக்கல், குமாரபாளையம் ஆகிய தொகுதிகளில் திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி, திமுக வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்தார். நாமக்கல் பூங்கா சாலையில் நாமக்கல் தொகுதி திமுக வேட்பாளர் ராணியை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.



அப்போது அவர் பேசியது: "நாமக்கல்லில் முதன்முறையாக நிறுத்தப்பட்டுள்ள பெண் வேட்பாளர் ராணி. நாம் உரிமையோடு, பெருமையோடு வந்து வாக்கு கேட்கிறோம். ஏனெனில், சொன்ன வாக்குறுதியெல்லாம் நிறைவேற்றி தந்ததால் உரிமையோடு வந்து வாக்கு கேட்கிறோம்.

மகளிர் உரிமைத் தொகை ஒரு மாதம் கழித்து மீண்டும் முதல்வராக ஸ்டாலின் பொறுப்பேற்ற பின் ரூ.2 ஆயிரமாக வழங்கப்படும். திமுக கூட்டத்தில் எல்லாரும் இரண்டு விரலை காண்பிக்க தொடங்கிவிட்டனர். ஏனெனில் இரண்டு எனில் 2 ஆயிரம் ரூபாய் தான்.

எடப்பாடி பழனிசாமி, பாஜகவுடன் கூட்டணி வைத்துள்ளார். பாஜகவுடன் கூட்டணி வைத்துள்ளர்களின் நிலைமையெல்லாம் என்ன ஆயிற்று என்பது அனைவருக்கும் தெரியும். பிஹாரில் எத்தனையோ முறை முதல்வராக இருந்த நிதிஷ் குமார், தற்போது மாநிலங்களவை உறுப்பினராக அனுப்பப்பட்டுள்ளார்.

பாஜகவுடன் கூட்டணி வைத்த எத்தனையோ கட்சிகள் காணாமல் போய்விட்டன. எனவே எடப்பாடி பழனிசாமி பார்த்து பத்திரமாக இருந்து கொள்ள வேண்டும். ஏனெனில் தேர்தல் முடிந்த பின் ஏதோ ஒரு மாநிலத்திற்கு ஆளுநராக அனுப்பப்படுகிறார்கள். ஆளுநர் வேலை பெரிய கஷ்டம் எதுவும் இல்லை.

சசிகலா காலில் விழுந்து பதவிக்கு வந்த எடப்பாடி பழனிசாமி, கடைசியில் அவருக்கு கட்சியில் இடம் இல்லை என கூறிவிட்டார். ஜெயலலிதாவால் முதல்வராக்கப்பட்ட ஓபிஎஸ்ஸுக்கு கட்சியில் இடம் இல்லை என கூறிவிட்டார். அதனால் தமிழகத்தை காப்பற்ற வேண்டுமெனில் முதல்வர் ஸ்டாலினால்தான் முடியும் என முடிவெடுத்து திமுகவில் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார்.

தமிழகத்துக்கும், தன்னை வளர்த்துவிட்டர்களுக்கும் எடப்பாடி பழனிசாமி துரோகம் இழைத்துக் கொண்டுள்ளார். இன்று அண்ணா திமுக, அமித் ஷா திமுகவாகிவிட்டது. அதனால் அவரை நிச்சயம் ஆளுநராக அனுப்புவார்கள். இவரைப் போல் அடிமை யாரும் கிடைக்க மாட்டார்கள்.

எடப்பாடி பழனிசாமிக்கு தேர்தல் பயம் போய் தற்போது அவருக்கு தேர்தல் ஜுரம் வந்துவிட்டது. அதனால் என்ன பேசுறோம் என தெரியாமல் முதல்வரை கீழ்த்தரமாக விமர்சனம் செய்கிறார். எதிர்க்கட்சி தலைவர் என்பதை மறந்து விமர்சனம் செய்கிறார்.

இதற்கெல்லாம் தமிழக மக்கள் இந்த தேர்தலில் எடப்பாடி பழனிசாமிக்கு சரியான பாடத்தை புகட்டுவர். கடந்த மக்களவைத் தேர்தலில் பாஜகவுடன் ஒட்டும் இல்லை உறவும் இல்லை என்று கூறிய அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, இப்போது பாஜகவுடன் கூட்டணி வைத்து உள்ளார். பல மாநிலங்களில் பாஜகவுடன் கூட்டணி வைத்தவர்கள் நிலை என்ன ஆனது என்று உங்களுக்கு தெரியும்.

தமிழக மக்களின் உரிமைகளுக்காக போரடும் இயக்கம் திமுக. தொகுதி மறுசீரமைப்பு கொண்டு வந்து தமிழகத்திற்கு உண்டான மக்களவை தொகுதியை குறைக்க முயற்சி நடக்கிறது. கடந்த 2016ம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்றால் அதிமுக ஆட்சியில் செல்போன் தருவோம் என கூறியது என்ன ஆனது.

தேர்தலில் வெற்றிபெற்று திமுக ஆட்சி அமைந்ததும் ஒவ்வொரு வீட்டுக்கும் ரூ.8 ஆயிரம் கூப்பன் தருகிறோம். உங்களுக்கு தேவையான வீட்டு உபயோக பொருளை வாங்கிக் கொள்ளலாம். இந்த தேர்தல் தமிழகத்தின் கீழடிக்கும், வட இந்தியாவில் ஆளர்எஸ்எஸ் தலைமையகம் அமைந்துள்ள நாக்பூருக்கும் இடையிலான தேர்தல். நிச்சயம் திமுக வெற்றிபெற்று மீண்டும் ஆட்சி அமைக்கும்" என்று அவர் பேசினார்.

# தமிழகத்தில் இரு தினங்களுக்கு வழக்கமான அளவிலேயே அதிகபட்ச வெப்பநிலை

சென்னை, ஏப்.10-

தமிழகத்தில் நாளையும், நாளை மறுதினமும் அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவிலேயே இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: ஒடிசா முதல் மன்னார் வளைகுடா வரை தெலங்கானா, ராயலசீமா, உள் தமிழகம் வழியாக சுமார் 900 மீட்டர் உயரத்தில், ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக நாளை (ஏப்.10) மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழையும், 11ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.



ஏப்.12ம் தேதி தென் தமிழகம், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழையும், 13, 14 தேதிகளில் தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும். 15ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் நாளையும், நாளை மறுதினமும் அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவில் இருக்கக்கூடும். 12, 13 தேதிகளில் ஓரிரு இடங்களில் 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகரிக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டியும் இருக்கக்கூடும்.

தமிழகத்தில் காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி, தேனி மாவட்டம் பெரியகுளம், ஈரோடு மாவட்டம் வரட்டுப்பள்ளத்தில் தலா 4 செமீ, தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில், ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடி விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இடங்களில் தலா 3 செமீ மழை பதிவாகியுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

# பிஹாரின் அடுத்த முதல்வர் ஆக சாம்ராட் சவுத்ரிக்கு வாய்ப்பு

பாட்னா, ஏப்.10-

சுமார் 20 ஆண்டுகளுக்கும் மேலாக பிஹார் முதல்வராக இருக்கும் ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் தலைவரான நிதிஷ் குமார், தனது முதல்வர் பதவியை ராஜினாமா செய்யவுள்ளார். இதனையடுத்து, தற்போதைய துணை முதல்வரான சாம்ராட் சவுத்ரி, பிஹாரின் அடுத்த முதல்வராகப் பொறுப்பேற்க அதிக வாய்ப்புள்ளதாக கருதப்படுகிறது.

சமீபத்தில் மாநிலங்களவை எம்.பி.யாக தேர்வான நிதிஷ் குமார், பதவியேற்பதற்காக அவர் டெல்லிக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். இதனையடுத்து அடுத்த முதல்வரைத் தேர்ந்தெடுப்பதற்காக தேசிய ஜனநாயக கூட்டணியின் சட்டப்பேரவைக் கட்சி கூட்டம் ஏப்ரல் 14ஆம் தேதி அன்று நடைபெறவுள்ளது. அப்போது நிதிஷ் குமார் பிஹார் முதல்வர் பதவியிலிருந்து விலகக்கூடும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.



தற்போதைய துணை முதல்வரான சாம்ராட் சவுத்ரி, நிதிஷ் குமாருக்குப் பிறகு பிஹாரின் அடுத்த முதல்வராகப் பொறுப்பேற்க அதிக வாய்ப்புள்ள நபராகக் கருதப்படுகிறார். இது குறித்து பாஜகவின் தேசிய தலைமையைச் சந்திப்பதற்காக அவர் புதுடெல்லிக்குச் சென்றுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பத்தாவது முறையாக முதல்வராகப் பதவி வகித்த நிதிஷ் குமார், மார்ச் 30ஆம் தேதியன்று பிஹார் சட்ட மேலவை உறுப்பினர் பதவியிலிருந்து விலகினார். முன்னதாக, அவர் மார்ச் 17ஆம் தேதியன்று நடைபெற்ற தேர்தலில், ராஜ்யசபா எம்.பி.யாக தேர்வானார்.

"பிஹார் சட்டப்பேரவையின் இரு அவைகளிலும், இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் உறுப்பினராகப் பணியாற்ற வேண்டும்" என்ற தனது நீண்டகால விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ளும் வகையில், முதல்வர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்த பிறகு, மார்ச் 5ஆம் தேதியன்று நிதிஷ் குமார் மாநிலங்களவைத் தேர்தலுக்கான தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்தார்.




# மதுரை மாவட்டத்தில் 145 வேட்புமனுக்கள் ஏற்பு

மதுரை ஏப்.10-

மதுரை மாவட்டத்தில் உள்ள 10 தொகுதிகளில் போட்டியிட தாக்கல் செய்யப்பட்ட 266 வேட்புமனுக்களில், 145 மனுக்கள் ஏற்கப்பட்டு மீதமுள்ள 121 நிராகரிக்கப்பட்டன. ஏப்ரல்7 அன்று நடைபெற்ற பரிசீலனையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. மேலூர், மதுரை கிழக்கு, சோழவந்தான், மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மத்தியம், மதுரை மேற்கு, திருப்பரங்குன்றம், திருமங்கலம், உசிலம்பட்டி ஆகிய தொகுதிகளில் ஏற்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை முறையே 15,16,14,14,13,15,19,20,12 ஆகும்.



# புதுச்சேரியில் காங்கிரஸ் பாஜக தொண்டர்கள் இடையே மோதல்: தடியடி நடத்தி கலைத்த போலீஸார்

புதுச்சேரி, ஏப்.10-

புதுச்சேரி திருக்கனூரில் வாக்குச்சாவடியில் காங்கிரஸ் பாஜக தொண்டர்கள் மோதலால் தடியடி நடத்தி போலீஸார் கலைத்தனர்.

புதுச்சேரி மண்ணாடிபட்டு தொகுதியில் காங்கிரஸ் பாஜக வேட்பாளர்கள் நேருக்கு நேர் களம் காண்கின்றனர். புதுச்சேரி உள்துறை அமைச்சர் நமச்சிவாயத்தை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் பேரவை முன்னாள் துணைத்தலைவர் செல்வமும் போட்டியிடுகிறார்.

திருக்கனூர் அரசு உயர்நிலை பள்ளியில் வாக்குச்சாவடி அமைக்கப்பட்டிருந்தது. இங்கு பாஜகவினர் அதிகளவில் திரண்டு இருந்தனர். இதனால் அங்கு வந்த காங்கிரஸ் கட்சியினர், எதற்காக நீங்கள் இங்கு திரண்டு இருக்கிறீர்கள். வாக்காளர் மட்டும் தான் இருக்க வேண்டும் மற்றவர் இருக்கக்கூடாது என்று பாஜகவினரிடம் தெரிவித்தனர்.

இதனால் இரு தரப்பு இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. வாக்குவாதம் மோதலாக மாறி இருதரப்பினரும் ஒருவொரையொருவர் தாக்கத் தொடங்கினார். அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீஸார் இரு தரப்பினரையும் தடியடி நடத்தி கலைத்தனர். இதனால் அங்கு போலீஸார் கூடுதலாக குவிக்கப்பட்டனர்.

# "ஒப்பந்தம் அல்லது மோதல் மூலம் இலக்குகளை இஸ்ரேல் அடையும்" நெதன்யாகு திட்டவட்டம்

டெல் அவிவ், ஏப்.10-

"நாம் இன்னும் நிறைவேற்ற வேண்டிய இலக்குகள் நிறைய உள்ளன. அதனை இஸ்ரேல் ஒப்பந்தம் மூலமாகவோ அல்லது சண்டையிட்டோ அடையும்" என அந்நாட்டின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறினார்.

தற்காலிக போர் நிறுத்தம் ஏற்பட்டதை தொடர்ந்து நாட்டு மக்களிடம் பேசிய பெஞ்சமின் நெதன்யாகு, "இஸ்ரேலியர்களின் மன உறுதிக்கு நன்றி தெரிவிக்கிறேன். எங்கள் அற்புதமான மக்களே, உங்களுக்கு நான் நன்றி கூற விரும்புகிறேன். குண்டுவீச்சிலிருந்து தப்பிக்க பாதுகாப்பான தங்குமிடங்களில் நீங்கள் மன உறுதியைக் காட்டினீர்கள். இதனால் நாம் அனைவரும் இணைந்து மாபெரும் வெற்றிகளை அடைந்தோம்.



போர்க்களத்தில் உள்ள நமது வீரர்கள் மற்றும் உள்நாட்டில் உள்ள நீங்கள் அனைவரும் முக்கியமானவர்கள். ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தப் போரில் உயிர் நீத்த நமது அன்புக்குரியவர்களுக்கு நான் தலைவணங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

துயரத்தில் வாடும் குடும்பங்களை அரவணைக்குமாறும், காயமடைந்த நமது அன்புக்குரியவர்கள் விரைவில் குணமடைய விழையுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

என் சகோதர சகோதரிகளே, இஸ்ரேல் தேசம் மகத்தான வெற்றிகளை அடைந்துள்ளது. சமீப காலம் வரை முற்றிலும் கற்பனையாகத் தோன்றிய வெற்றிகள் இவை. ஈரான் முன்னெப்போதையும் விட பலவீனமாக உள்ளது, இஸ்ரேல் முன்னெப்போதையும் விட வலிமையாக உள்ளது.

இந்தத் தருணம் வரை, நான் ஒன்றை தெளிவுபடுத்த விரும்புகிறேன். நாம் இன்னும் நிறைவேற்ற வேண்டிய இலக்குகள் நிறைய உள்ளன. அவற்றை நாம் உடன்படிக்கை மூலமாகவோ அல்லது மீண்டும் சண்டையைத் தொடங்குவதன் மூலமாகவோ அடைவோம்" என்று அவர் கூறினார்.

இதற்கிடையில், பெய்ரூட்டில் ஹிஸ்புல்லா பொதுச் செயலாளர் நைம் காசிமின் தனிப்பட்ட செயலாளரான அலி யூசுப் ஹர்ஷியை இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் கொன்றன.

இது குறித்து இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் வெளியிட்ட பதிவில், "பெய்ரூட்டில் ஹிஸ்புல்லா பொதுச் செயலாளர் நைம் காசிமின் தனிப்பட்ட செயலாளரான அலி யூசுப் ஹர்ஷி கொல்லப்பட்டார். அவர் காசிமின் நெருங்கிய கூட்டாளியும், தனிப்பட்ட ஆலோசகரும் ஆவார். காசிமின் அலுவலகத்தை நிர்வகிப்பதிலும், பாதுகாப்பதிலும் ஹர்ஷி முக்கியப் பங்கு வகித்தார்.

லிட்டானி நதிக்குத் தெற்கே ஆயுதங்களைக் கொண்டு செல்ல ஹிஸ்புல்லா பயன்படுத்திய இரண்டு முக்கியக் கடக்கும் இடங்களையும், தெற்கு லெபனானில் உள்ள ஆயுதக் கிடங்குகள், ஏவுகணை ஏவுதளங்கள் மற்றும் கட்டளை மையங்களையும் இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் தாக்கின" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தத்தில் லெபனான் சேர்க்கப்படவில்லை என்று பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ள நிலையில், அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வேன்ஸும், "நாங்கள் அப்படி ஒரு வாக்குறுதியை ஒருபோதும் அளிக்கவில்லை" என்று கூறியுள்ளார்.



# மதுரை மாவட்டத் தேர்தல் களம் அதிரடி ஆய்வில் பொதுப் பார்வையாளர்!

மதுரை, ஏப்.10-
195திருப்பரங்குன்றம் மற்றும் 196திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிகளின் தேர்தல் பொதுப் பார்வையாளர் பிம்லா டி. ரெஷ்புரா, இ.ஆ.ப. நேரடியாக வேட்புமனுத் தாக்கல் மையங்களுக்குச் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

வாக்குச்சாவடிகள் தயார்: நிலையூர், திருநகர், கரிசல்காளம்பட்டி, செக்கானூரணி மற்றும் கள்ளிக்குடி போன்ற பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடிகளில் அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

PRO செயலி மூலம் கண்காணிப்பு: மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து இந்தியத் தேர்தல் ஆணையத்தின் றிஸிளி செயலி வழியாக நடைபெற்ற காணொளிக் கூட்டத்தில் பங்கேற்று, நுண் பார்வையாளர்களின் (Micro Observers) நேர்மையான தேர்வு முறையை உறுதிப்படுத்தினார்.

அதிகாரிகள் பங்கேற்பு: இந்த ஆய்வின் போது உதவித் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் உடனிருந்தனர்.




■ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026யை முன்னிட்டு, வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கையை கண்காணிக்க நியமிக்கப்பட்ட 127 நுண்பார்வையாளர்களுக்கான முதல் கட்ட பயிற்சி தேர்தல் பொது பார்வையாளர்கள் நீரஜ் குமார்,கடையநல்லூர், தென்காசி) ஈஷா பிரியா, (ஆலங்குளம்), மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், , ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.



■ நெல்லை மாவட்டம் ராதாபுரம் சட்டமன்ற தொகுதியில் சுயேட்சையாக களமிறங்கிய... நெல்லை தெற்கு மாவட்ட தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் ஜெயகோபால் ராதாபுரம் தேசிய ஜனநாயக கூட்டணி பாஜக வேட்பாளர் பாலகிருஷ்ணனை சந்தித்து தனது ஆதரவை தெரிவித்தார்.

## 15,400 டன் LPG உடன் நவி மும்பை துறைமுகம் வந்தடைந்தது Green Asha கப்பல்

ஈரான், ஏப்.10-



ஈரான் அனுமதியுடன் ஹார்முஸ் நீரிணையை கடந்து, 15,400 டன் LPG உடன் நவி மும்பை துறைமுகம் வந்தடைந்தது Green Asha கப்பல். போர் தொடங்கியது முதல் இதுவரை 8 LPG கப்பல்கள் பாதுகாப்பாக இந்தியா வந்துள்ளது குறிப்பிடத்தக்கது



## "ஒவ்வொரு கார்டுக்கும் ரூ. 10,000 ரொக்கம்" "உடுமலையைச் சுற்றும் இரட்டை இலை வியூகம்! திரண்ட கூட்டணி கட்சித் தொண்டர்கள்

உடுமலை ஏப். 10-
திருப்பூர் மாவட்டம் உடுமலை சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளர் உடுமலை கே.ராதாகிருஷ்ணன், உடுமலை நகரப் பகுதிகளில் சூறாவளிப் பிரச்சாரம் மேற்கொண்டார்.

*மெகா வாக்குறுதிகள்:* உடுமலை நகரம் 26 மற்றும் 27வது வார்டுகளில் வாக்கு சேகரித்த அவர், "எடப்பாடியார் தலைமையில் மீண்டும் அம்மா அரசு அமைந்தவுடன், தமிழகத்தில் உள்ள அனைத்து ரேஷன் கார்டுதாரர்களுக்கும் இலவசக் குளிர்சாதனப் பெட்டி மற்றும் ரூபாய் 10,000 ரொக்கம் வழங்கப்படும்" எனச் சூளுரைத்தார்.

*வீடு வீடாகப் பிரச்சாரம்:* அம்மா அரசின் முந்தைய சாதனைகளை எடுத்துக் கூறி, இரட்டை இலை சின்னத்திற்குப் பொதுமக்களிடம் ஆதரவு திரட்டினார்.

*கூட்டணி பலம்:* இந்தப் பிரச்சாரத்தின் போது கூட்டுறவு சங்க முன்னாள் தலைவர் தனலட்சுமி, மாவட்ட வர்த்தக அணி செயலாளர் உதயகுமார், சசி, உடுமலை நகர கழக செயலாளர் ஹக்கீம், பழனிச்சாமி, பாஜக நகர மண்டல தலைவர் பாலகுரு, ருத்தரீஸ்வரன், எஸ்.எம்.நாகராஜ், சின்னசாமி, எல்.ஐ.சி கிருஷ்ணன், அபி நாகராஜ், அசோக், வனிதா, ரஞ்சித், அம்மா மு.க.பாஸ்கர், பிரேம், பாஜக சின்ராஜ் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், அதிமுக வார்டு செயலாளர்கள் வீடு வீடாக சென்று இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்கள்.




■ ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் நடைபெற்ற செயல் வீரர்கள் கூட்டத்தில், ஆலங்குளம் சட்டமன்ற தொகுதி அஇஅதிமுக வெற்றி வேட்பாளர் ரிஸிறி பிரபாகரன் அவர்களை, ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளரும், கழக அமைப்பு செயலாளருமான ஏ.கே.சீனிவாசன் அறிமுகம் செய்து சிறப்புரை ஆற்றினார்.







■ _புதுச்சேரி துணை நிலை ஆளுநர் கைலாஷ்நாதன், புதுச்சேரி மாவட்ட தேர்தல் நடத்தும் அதிகாரி குலோத்துங்கன் வாக்குச்சாவடி மையத்தில் தங்களது வாக்கினை பதிவு செய்தனர்.




## திருமங்கலத்தில் மணிமாறன் முன்னிலையில் திமுகவில் இணைந்தஆர்.பி.உதயகுமார் ஆதரவாளர்கள்

மதுரை ஏப்.10-
மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே உள்ள கள்ளிக்குடி ஒன்றியத்தைச் சேர்ந்த பல பகுதியில் இருந்து ஏராளமான அதிமுகவினர் அக்கட்சியில் இருந்து விலகி கள்ளிக்குடி வடக்கு தி.மு.க. ஒன்றிய செயலாளர் ராமமூர்த்தி தலைமையில் மாவட்ட செயலாளரும் திருமங்கலம் தொகுதி திமுக வேட்பாளருமான மணிமாறன் முன்னிலையில் தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர்.

மேலும் அதிமுக மாவட்ட இளைஞரணி செயலாளர் முத்து மற்றும் 60க்கும் மேற்பட்டோர் மணிமாறன் தலைமையில் தி.மு.கவில் இணைந்தனர். அவர்களை சால்வை அணிவித்து வரவேற்றார்.






■ தமிழகத்தில் வரவேற்கின்ற சட்டமன்றத் தேர்தல் அமைதியான முறையில் நடைபெறவும். பொதுமக்கள் எவ்வித அச்சமுமின்றி, சுதந்திரமாக வாக்களிக்க ஏதுவாக பாதுகாப்பை உறுதி செய்யும் விதமாகவும், மதுரை மாநகர புதிய காவல் ஆணையராக பொறுப்பேற்றுள்ள அபிஷேக் திக்சித், தேர்தல் நடைபெறும் பல்வேறு வாக்குச்சாவடி மையங்கள் மற்றும் வாக்கு எண்ணும் மையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற் பாடு நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து ஆய்வு செய்தார்.

## மேற்கு வங்கத்தில் விதிமீறல் நடந்தால் மறுதேர்தல்: தேர்தல் ஆணையம் எச்சரிக்கை

புதுடெல்லி, ஏப்.10-
மேற்கு வங்கத்தில் வரும் 23, 29 ஆகிய தேதிகளில் 2 கட்டமாக தேர்தல் நடக்கிறது. பொதுவாக தேர்தலின்போது வன்முறை சம்பவங்கள் அதிகம் நிகழ்வது வழக்கம். இந்த முறை தேர்தல் ஆணையம் விதிகளை மிக தீவிரமாக அமல்படுத்த தயாராகி வருகிறது. விதிகளை மீறினால் மறுதேர்தல் நடத்தப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.




இது தொடர்பாக, வாக்குச்சாவடி அதிகாரிகள் மற்றும் தலைமை அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் தெளிவான அறிவுறுத்தலை வழங்கி உள்ளது. அதாவது, 'இந்த முறை முதன்முறையாக, செயற்கை நுண்ணறிவு (ஏஐ) வசதியுடன் கூடிய சிசிடிவி கேமராக்கள் மூலம் வாக்குச்சாவடிகள் நேரலையாக கண்காணிக்கப்படும். கேமராக்கள் அணைக்கப்பட்டாலோ அல்லது சந்தேகத்துக்கு இடமான நடவடிக்கைகள் கண்டறியப்பட்டாலோ உடனடியாக மறு தேர்தலுக்கு உத்தரவிடப்படும்' என தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.






■ மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள குமாரம் பகுதியில்அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்ற கழகம் சோழவந்தான் தொகுதி வேட்பாளர் டாக்டர் பாலமுருகன், தென்னந்தோப்பு சின்னத்திற்கு பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார். அருகில் நிர்வாகி பண்ணைகுடி மைனர் ராமச்சந்திரன், பாமக மாவட்டச் செயலாளர்கிட்டு, ஒன்றிய செயலாளர் முருகன்ஜோதிமுருகன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.





SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000

# விமானத்தில் வந்து தேர்தலில் வாக்களிக்க ரூ.2 லட்சம் வரை செலவு செய்யும் மலையாளிகள்

திருவனந்தபுரம், ஏப்.9-

அமெரிக்கா, ஈரான் இடையிலான போர் காரணமாக வளைகுடா நாடுகளில் விமான போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் இந்தியாவுக்கான விமான டிக்கெட் மிகக் கடுமையாக உயர்ந்திருக்கிறது. பொதுவாக ஐக்கிய அரசு அமீரக தலைநகர் அபுதாபி மற்றும் துபாய் உள்ளிட்ட நகரங்களில் இருந்து இந்திய நகரங்களுக்கு வருவதற்கு ரூ.10,000 முதல் ரூ.20,000 வரை விமான கட்டணம் வசூல் செய்யப்பட்டது.



போர் காரணமாக தற்போது விமான கட்டணம் ஒரு லட்சம் ரூபாய் முதல் 2 லட்சம் ரூபாய் வரை உயர்ந்திருக்கிறது. மிகவும் இக்கட்டான நேரங்களில் ரூ.2.5 லட்சம் வரைகூட விமான கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

எனினும் ஐக்கிய அரபு அமீரகத்தில் வசிக்கும் மலையாளிகள், கேரள சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்களிக்க விமான டிக்கெட்டுக்கு ரூ.2 லட்சம் வரை செலவு செய்து சொந்த ஊருக்கு திரும்பி வருகின்றனர். இதுதொடர்பாக முனீர் என்பவர் கூறும்போது, “கடந்த 19 ஆண்டுகளாக ஐக்கிய அரபு அமீரகத்தில் வசித்து வருகிறேன். ஒவ்வொரு தேர்தலின்போதும் கேரளாவுக்கு சென்று வாக்களிப்பதை வழக்கமாக வைத்திருக்கிறேன். தற்போதைய சட்டப்பேரவைத் தேர்தலுக்காக கேரளா செல்ல ரூ.2.3 லட்சத்துக்கு டிக்கெட் வாங்கி உள்ளேன். எவ்வளவு செலவானாலும் வாக்குரிமையை செலுத்துவதை கடமையாக கருதுகிறேன்" என்று தெரிவித்தார்.

ஐக்கிய அரபு அமீரகத்தின் அஜ்மான் நகரில் வசிக்கும் ஆஷா என்பவர் கூறும்போது, “கேரள சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்களிப்பதற்காக சொந்த ஊருக்கு செல்ல திட்டமிட்டு உள்ளேன். இதற்காக ஒரு லட்சம் ரூபாய்க்கு விமான டிக்கெட் வாங்கி உள்ளேன். எனது தங்கை நிம்மியும் இதே தொகைக்கு விமான டிக்கெட் முன்பதிவு செய்திருக்கிறார்” என்றார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் சுமார் 10 லட்சம் மலையாளிகள் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் விமான டிக்கெட்டுக்கு ரூ.2 லட்சம் வரை செலவு செய்து கேரளாவுக்கு திரும்பி வருகின்றனர்.

# “உண்மையான காங்கிரஸார் தவெகவில் உள்ளனர்” : நெல்லையில் விஜய் பேச்சு

திருநெல்வேலி: ஏப்.9-

“பல கோடிகளை கொடுத்து காங்கிரஸை தங்கள் பையில் போட்டுக் கொண்டனர். ஆனால், உண்மையான காங்கிரஸார் தமிழக வெற்றிக் கழகத்தில் தான் உள்ளனர்” என்று தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் பேசினார்.

திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள 22 சட்டப் பேரவை தொகுதிகளில் போட்டியிடும் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர்களை ஆதரித்து பாளையங்கோட்டை கேடிசி நகரில் நடைபெற்ற தவெக பிரச்சார பொதுக் கூட்டத்தில் அக்கட்சி தலைவர் விஜய் பேசியது:



“திமுக கையில் முழு அதிகாரம் இருந்திருந்தால் கண்டிப்பாக இந்த நிகழ்ச்சி நடந்திருக்காது. ஏதாவது முட்டுக்கட்டை போட்டு நிகழ்ச்சியை நடத்தவிடாமல் செய்திருப்பார்கள். தற்போது அதிகாரமில்லாத முதல்வராக ஸ்டாலின் இருக்கிறார். இதனால், இங்கு சிறப்பாக நிகழ்ச்சியை நடத்த முடிந்துள்ளது.

திமுக அரசு நமக்கு எதிராக பிரச்சினைகள், அவதூறுகள் பரப்பினார்கள். திமுக, பாஜக கூட்டணி வெளியே தனித்தனியாக இருப்பார்கள். ஆனால் இரண்டு பேரும் ஒன்றுதான். இருவரின் நோக்கமும் ஒன்றுதான். விஜய் வந்துவிடக் கூடாது என்பதுதான் அவர்களது நோக்கமே. நான் வந்ததால் ஊழல் செய்ய முடியாதபடி செய்துவிடுவேன் என்பதால் என் மீது அவர்களுக்கு கடும் ஆத்திரம்.

அவர்கள் அடுத்து ஆட்சிக்கு வரமுடியாத சூழ்நிலையை மக்கள் உருவாக்கிவிட்டனர். அவர்களின் கூட்டணி கணக்கு எடுபடவில்லை. அவர்களின் கல்லாப்பெட்டி கூட்டணி கலகலத்துப் போய் நிற்கிறது. அதை ஒட்டவைத்துக் கொண்டிருக்கிறார். கூட்டணி கட்சியினரே ஒருவருக்கு ஒருவர் ஓட்டு போட மாட்டர்கள் போலிருக்கிறது. திமுகவின் நேரடி கூட்டணிக்கும், மறைமுக கூட்டணிக்கும் நம் மீது கடும் ஆத்திரம். அவர்கள் குடும்பத்திலேயே விசில் சத்தம் பலமாக கேட்கிறதாம். அதனால் இன்னும் ஆத்திரம்.

சில பல கோடிகளை கொடுத்து தனது பையில் காங்கிரஸை திமுக போட்டுக் கொண்டது. ஆனால், உண்மையான காங்கிரஸார் நம்மிடம் உள்ளனர். அவர்களது சிறுபான்மை பாசம் என்ற சாயம் வெளுத்துப் போய்விட்டது.

நான் ஒவ்வொரு வீட்டுக்குள்ளேயும் போனதற்குப் பின்னரே கட்சியை ஆரம்பித்துள்ளேன். இது அரசியலை தாண்டிய உறவு. அரசியல் ஆதாயம் தேடுவோருக்கு இது புரியாது. மற்றவர்களுக்கு இது எலெக்ஷன். எனக்கு ஒரு எமோஷன். எனக்கு ஒன்று என்றாலும், மக்களுக்கு ஒன்று என்றாலும் மக்களுக்கும், எனக்கும் கண் கலங்கும்.

கரூர் விஷயத்தில் என் மீது பழிபோட்டாலும் மக்கள் என் பக்கம் நிற்கிறார்கள். இதனால், ஜனநாயகன் படத்தை முடக்கினர். அதை யார் முடக்கினார்கள் என்பது உங்களுக்கு தெரயும். அதுவும் எடுபடவில்லை.

நான் வெளியே வரக் கூடாது என்று கண்டிஷன் போட்டனர். அதுவும் எடுபடவில்லை. பின்னர் நம்மை சுற்றியிருக்கிறவர்களை வைத்து அவதூறு பரப்பினர். அதுவும் மக்கள் மத்தியில் எடுபடவில்லை.

எத்தனை சோதனைகள், வேதனைகளை கடந்து வந்துள்ளேன். திமுக, பாஜவினரால் என்னை மக்கள் மத்தியில் இருந்து பிரிக்க முடியாது. ஒவ்வொரு வீட்டியிலும் விஜய்யும், விஜியும் இருக்கும் வரைக்கும் என்னை மக்கள் மத்தியிலிருந்து பிரிக்க முடியாது.

தமிழகத்திலுள்ள ஒவ்வொரு சட்டப் பேரவை தொகுதியிலும் விஜய்தான் நிற்கிறேன். வேட்பாளர்தான் விஜய், விஜய்தான் வேட்பாளர். இத்தனை ஆண்டுகளாக யார் யாருக்கெல்லாம் ஓட்டு போட்டீர்கள். இந்த முறை உங்கள் குடும்பத்தில் உள்ளவருக்கு ஓட்டுப் போடுங்கள். அந்த வேட்பாளருக்கு ஓட்டுப் போடுவது நமக்கு நாமே ஓட்டு போடுவது மாதிரி. அந்த வேட்பாளர் வெற்றி பெற்றால் நீங்கள் வெற்றிபெற்றது போன்றதாகும்.

இந்த தேர்தல் 50 ஆண்டு நடக்கும் அதிசய தேர்தல். உங்களுக்காக பசும்பொன் முத்துராமலிங்க தேவர், வீரன் சுந்தரலிங்கம், வ.உ.சி., அழகுமுத்துகோன், கட்டபொம்மன், குரூஸ் பர்னாந்து போன்ற தலைவர்கள் மாதிரி தவெக உழைக்கும்.

தவெக ஆட்சியில் பெண்கள், இளைஞர்கள், விவசாயிகள், மீனவர்கள், உழைப்பாளிகள் எல்லாரும் நன்றாக இருப்பார்கள். நமது சந்ததிகள் நன்றாக இருக்கும். எனவே வேறு யாருக்கும் ஓட்டு போட்டு ஓட்டை வீணாக்கிவிடாதீர்கள்.

மக்கள் பணத்தில் ஒரு பைசா கூட தொடமாட்டேன். தற்போது ஆளுகிறவர்களும், இதற்குமுன் ஆண்டவர்களும் இதை சொல்ல முடியுமா? நீங்கள் ஒழுங்காக ஆட்சி நடத்தியிருந்தால் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டிருக்குமா? பெண்களுக்கு பாதுப்பு கிடைக்காமல் இருந்திருக்குமா? இதற்கெல்லாம் பதில் சொல்ல தகுதி இருக்கிறதா?

இரண்டரை வயது குழந்தையை திமுகவை சேர்ந்தவர் கொலை செய்தார். விளாத்திகுளம் பகுதியில் பிளஸ் டூ மாணவி கொலை செய்யப்பட்டதற்கெல்லாம் என்ன பதில் சொல்லப்போகிறீர்கள்?

போலீஸாரை பொம்மையாக வைத்து விளையாடிக் கொண்டிருக்கிறீர்கள். நாங்குநேரி சம்பவத்தை ஏன் தடுக்கவில்லை? சட்டவிரோதமாக மணலை, கனிம வளங்களை திருடுகிறார்கள். குடும்பமாக கொள்ளை அடிக்கிறார்கள். ஆட்சி முழுக்க ஊழல் என்று நாறிக் கிடக்கிறது. இந்நிலையில் எந்த முகத்தை வைத்து ஓட்டு கேட்பீர்கள்?


உங்கள் பணத்தை வைத்து மக்களை விலைக்கு வாங்க முடியாது. இது மாற்றத்துக்கான தேர்தல், மாற்றத்தை கொண்டுவரப்போகும் தேர்தல். இதை உங்களாலேயோ மற்றும் பலராலேயோ தடுக்க முடியாது.

வசதியான வாழ்க்கையை தூக்கி எறிந்துவிட்டு, அத்தனை வலிகளையும் தாங்கி வந்துளளேன். தமிழகத்தில் திமுகவுக்கும் தவெகவுக்கும் தான் போட்டி. இது விசில் புரட்சி தேர்தலாக இருக்கும்” என்று விஜய் பேசினார். ‘நான் தன்னந்தனி ஆளு’ என்ற கட்சியின் தேர்தல் பரப்புரை பாடலை பாடி முடித்தார் விஜய்.

# ஆதாரங்கள் தராவிடில் முதல்வர் செயலாளருக்கு எதிரான வழக்கை எப்படி விசாரிப்பது? ஐகோர்ட்

சென்னை, ஏப்.9-

தேர்தல் நடத்தை விதிகளை மீறி செயல்படுவதாக முதல்வரின் செயலாளர் உமாநாத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு எந்த ஆதாரங்களும் தாக்கல் செய்யாத நிலையில் அவருக்கு எதிரான வழக்கை எப்படி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள முடியும் என சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.



பாஜகவை சேர்ந்த வழக்கறிஞர் மோகன்தாஸ் தாக்கல் செய்த மனுவில், தமிழகத்தில் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ள நிலையில், முதல்வரின் செயலாளர் உமாநாத், தேர்தல் நடத்தை விதிகளை மீறும் வகையில் செயல்பட்டு வருகிறார் என்று குற்றம் சாட்டியுள்ளார்.

தேர்தல் அறிவிப்புக்கு பிறகு அரசு அதிகாரிகள் தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும் நிலையில், தொடர்ந்து முதல்வரின் செயலாளராக, உமாநாத், மாவட்ட ஆட்சியர்களுக்கும், காவல் துறை அதிகாரிகளுக்கும் உத்தரவுகளை பிறப்பித்து வருவதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தேர்தல் நடத்தை விதிகளுக்கு எதிராக செயல்படும் முதல்வரின் செயலாளர் மீது நடவடிக்கை எடுக்கும்படி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என்று வழக்கறிஞர் மோகன் தாஸ் மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி அருள்முருகன் அடங்கிய அமர்வு, ஐஏஎஸ் அதிகாரிக்கு எதிராக கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமாக எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யாத நிலையில் இந்த பொதுநல வழக்கை எப்படி விசாரணைக்கு ஏற்றுக் கொள்ள முடியும் என கேள்வி எழுப்பியது.

மேலும், புகார்கள் மீது தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், ஐஏஎஸ் அதிகாரி உமாநாத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கோரிய வழக்கில், அவரை எதிர் மனுதாரராக சேர்க்கவில்லை என்றும் நீதிபதிகள் சுட்டிக்காட்டினர்.

இதையடுத்து, உமாநாத்தை எதிர் மனுதாரராக சேர்க்க அவகாசம் வழங்க வேண்டும் என மனுதாரர் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதனை ஏற்ற நீதிபதிகள், விசாரணையை ஏப்ரல் 10ம் தேதிக்கு தள்ளிவைத்து உத்தரவிட்டனர்.

# விஜய் பரப்புரையில் 5 விபத்துகள் 16 பேருக்கு சிகிச்சை

நெல்லை, ஏப்.9-

தவெக தலைவர் விஜய்யின் பரப்புரையில் இன்று மட்டும் 5 விபத்துகள் ஏற்பட்டுள்ளது. தமிழக சட்டசபை தேர்தல் பிரசாரத்தின் ஒரு பகுதியாக தவெக தலைவரும் நடிகருமான விஜய் நெல்லை மற்றும் தூத்துக்குடியில் இன்று பிரசாரம் மேற்கொண்டார். இதையொட்டி அவர், சென்னையில் இருந்து விமானம் மூலம் இன்று நண்பகல் 11.40 மணிக்கு தூத்துக்குடி விமான நிலையம் வந்தார். தூத்துக்குடி விமான நிலையததில் இருந்து விஜய் புறப்படும் முன் இரண்டு விபத்துகள் நிகழ்ந்துள்ளன. தொடர்ந்து கே.டி சி நகரில் பிரசாரம் செய்த விஜய், அதன் பின்னர், சாலை மார்க்கமாக சென்றார்.Long Distance Bus & Rail

கிட்டத்தட்ட 35 கிமீ வரை சாலை வழியாக அவரது பயணத்திற்கு தேர்தல் கமிஷனிடம் அனுமதி பெறப்பட்டது. பிரசார வாகனத்தின் மேல்புறம் நின்று கொண்டே சாலையின் இருபுறமும் திரண்டிருந்த மக்கள் மற்றும் தொண்டர்களை நோக்கி கைகளை அசைத்தாவறும். வணக்கம் வைத்தவாறும் அவர்களை உற்சாகப்படுத்தினார். விஜயின் பிரசார வாகனத்தை பின்தொடர்ந்தபடி ஏராளமான பைக்குகளில் ரசிகர்கள் ஹெல்மெட் அணியாமல் வந்தனர். அப்போது ஒரு பைக்கில் சென்ற ரசிகர் நிலைதடுமாறி கீழே விழுந்தார். அந்த பைக் மீது பின்னால் வாகனங்கள் அடுத்தடுத்து மோதியது.பைக்குகள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் 7 பேர் காயம் அடைந்தனர். அதனை தொடர்ந்து நெல்லை நாராயணம்மாள்புரத்தில் விஜய் வாகனத்தை பின்தொடர்ந்த இருசக்கர வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்குள்ளானது. தொடர்ந்து திருநெல்வேலியில் அரசுப்பேருந்து மோதி காயமடைந்த இளைஞர் உட்பட 16 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது

# கால்வாயில் மணல் லாரி பாய்ந்து விபத்து

திருமலை, ஏப்.9-

கட்டுப்பாட்டை இழந்து பாலத்திலிருந்து கால்வாயில் மணல் லாரி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் டிரைவர் படுகாயமடைந்தார். ஆந்திர மாநிலம் குண்டூர் மாவட்டம் செப்ரோலுவின் புறநகர்ப் பகுதியில் உள்ள கொம்மமூர் கால்வாய்ப் பாலம் அருகே நேற்று மணல் ஏற்றிக்கொண்டு லாரி வந்துகொண்டிருந்தது. அப்போது திடீரெனக் கட்டுப்பாட்டை இழந்த லாரி பாலத்தின் பாதுகாப்புச் சுவரில் பலமாக மோதி நேராகக் கால்வாயில் விழுந்தது.

விபத்தின் தாக்கத்தால் வாகனத்தின் முன்பகுதி முற்றிலுமாக நசுங்கியது. இதனால் லாரியின் டிரைவர் முன்புற கேபினுக்குள் சிக்கி கொண்டார். இதனை கண்ட அவ்வழியே சென்ற வாகன ஓட்டிகளும் உள்ளூர் மக்களும் உடனடியாகச் செயல்பட்டு பாலத்தின் கீழ் சென்று அவரை வெளியே கொண்டு வந்தனர்.

மயக்க நிலையில் இருந்த டிரைவரை சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் குண்டூர் அரசு பொது மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். தகவல் கிடைத்ததும், செப்ரோலு போலீசார் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து ஆய்வு செய்தனர்.

கால்வாயில் விழுந்த டிப்பர் லாரியை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக, அதிவேகமே விபத்திற்குக் காரணம் என போலீசார் முடிவு செய்து இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருவதாக போலீசார் தெரிவித்தனர்

# அரியலூர்: அமைச்சர் சிவசங்கரின் காரை 4வது முறையாக சோதனை செய்த தேர்தல் பறக்கும் படை

அரியலூர், ஏப்.9-

அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் கார் 4வது முறையாக தேர்தல் பறக்கும் படையினரின் சோதனையில் சிக்கியது.




அரியலூர் மாவட்டத்தில் 2026 சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு தேர்தல் ஆணையத்தின் சார்பில் அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டம் சட்டப்பேரவை தொகுதிகளுக்கு தலா 9 கண்காணிப்பு குழுக்களும், 9 பறக்கும் படைகளும் அமைக்கப்பட்டு 24 மணி நேரமும் வாக்காளர்களுக்கு ஏதேனும் பணம் பட்டுவாடா செய்ய சட்டவிரோதமாக பணம் கொண்டு செல்லப்படுகிறதா, தேர்தல் விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா ? என்பது குறித்து கண்காணித்து வருகின்றனர்.

இந்நிலையில் அரியலூர் பெரம்பலூர் சாலையில் அமைச்சர் எஸ்.எஸ் சிவசங்கரின் கார் இன்று (ஏப்.8) காலை சென்று கொண்டிருந்தது. அப்போது அரியலூர் அரசு மருத்துவமனை அருகே வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த தேர்தல் பறக்கும் படை குழுவினர், அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கரின் காரை மறித்து சோதனையில் ஈடுபட்டனர். பறக்கும் படையினரின் சோதனைக்கு அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் முழு ஒத்துழைப்பு கொடுத்தார்.

மேலும், சோதனையில் பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் எதுவும் இல்லாததால் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கரின் காரை தொடர்ந்து செல்ல தேர்தல் பறக்கும் படையினர் அனுமதித்தனர். ஏற்கனவே, ஏப்.1, ஏப்.5 தேதிகள் என இந்த மாதம் மட்டும் இரு முறையும் அமைச்சர் சிவசங்கரின் கார் தேர்தல் பறக்கும் படையினரிடம் சோதனைக்கு சிக்கியது. அப்போதும் பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் கிடைக்கவில்லை. மொத்தம் இதுவரை 4 முறை அமைச்சரின் கார் பறக்கும் படையினரின் சோதனை சிக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# திருப்பரங்குன்றம் மலையில் தொல்லியல் ஆய்வுக்கு மாநில அரசு ஒத்துழைப்பு வழங்கவில்லை: மத்திய அரசு

மதுரை, ஏப்.9-

திருப்பரங்குன்றம் மலையில் மத்திய தொல்லியல் துறை ஆய்வுக்கு வருவாய்த் துறை அதிகாரிகள் ஒத்துழைக்கவில்லை என உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசு சார்பில் குற்றம்சாட்டப்பட்டது.



திருப்பரங்குன்றம் ஆடு, கோழி பலியிட தடை கோரிய வழக்கில் திருப்பரங்குன்றம் மலையை மத்திய தொல்லியல் துறை ஆய்வு நடத்த வேண்டும், ஒரு ஆண்டுக்குள் ஆய்வை முடிக்க வேண்டும் என நீதிபதி எஸ்.ஸ்ரீமதி உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை நிறைவேற்றக் கோரியும், உயர் நீதிமன்ற உத்தரவுபடி திருப்பரங்குன்றம் மலையில் தொல்லியல் ஆய்வு நடத்தாத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் கோரி மதுரை கே.கே.ரமேஷ், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனுத் தாக்கல் செய்தார்.

இந்த மனு நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், எஸ்.ஸ்ரீமதி அமர்வில் விசாரணைக்கு வந்தது. மத்திய அரசு சார்பில், ‘மத்திய தொல்லியல் துறை ஆய்வுக்கு தயாராக உள்ளது. மாநில வருவாய்த் துறை அதிகாரிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் ஆய்வு மேற்கொள்ள முடியாது. வருவாய் அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்கவில்லை’ எனக் கூறப்பட்டது.

மனுதாரர் தரப்பில், ‘உச்ச நீதிமன்றத்திலும் மத்திய அரசு இதே பதிலைத் தான் வழங்கியது’ எனக் கூறப்பட்டது. தொடர்ந்து மத்திய அரசு தரப்பில், ‘இதே கோரிக்கையுடன் மனுதாரர் உச்ச நீதிமன்றத்திலும் மனுத் தாக்கல் செய்துள்ளார்’ எனக் கூறப்பட்டது.

அதற்கு மனுதாரர் தரப்பில், ‘திருப்பரங்குன்றம் கோயிலில் இருந்து அறநிலையத் துறையை வெளியேற்ற வேண்டும் என அங்கு வழக்கு தொடரப்பட்டுள்ளது’ எனத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதிகள், ‘திருப்பரங்குன்றம் மலையை மத்திய தொல்லியல்துறை கையகப்படுத்த வேண்டும் என மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மத்திய அரசும், மாநில அரசும் கூட்டு ஆய்வு நடத்தாமல் எதுவும் செய்யமுடியாது’ என்றனர்.

மத்திய அரசு தரப்பில், ‘மாநில வருவாய்த் துறையினர் ஒத்துழைப்பு வழங்கவில்லை’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்த வழக்கில் மதுரை மாவட்ட ஆட்சியர் 4வது எதிர்மனுதாரராக சேர்க்கப்படுகிறார். அவர் மத்திய தொல்லியல் துறையுடன் கூட்டு ஆய்வு நடத்த வருவாய்த்துறை ஒத்துழைப்பு வழங்க உத்தரவிட வேண்டும். கூட்டு ஆய்வை மே மாதத்தில் முடிக்க வேண்டும். விசாரணை ஜூன் மாதத்துக்கு ஒத்திவைக்கப்படுகிறது’ என உத்தரவிட்டனர்.